# திருத்துறைப்பூண்டி நகராட்சி

## இயல்பு கூட்ட அறிக்கை

திருத்துறைப்பூண்டி நகர்மன்றத்தில் 31–12–2018 திங்கள் கிழமை மாலை 3.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்படும் இயல்பு கூட்ட அறிக்கை.

இடம்: திருத்துறைப்பூண்டி — தனி அலுவலர்,
நாள்: 29–12–2018 — திருத்துறைப்பூண்டி நகராட்சி.

### பொருள் எண் 1:

நகராட்சி ஆணையர் அவர்களின் டிசம்பர்–2018 மாதத்தின் நாட் குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** பதிவு செய்யலாம்.

### பொருள் எண் 2:

இந்நகராட்சி பகுதியில் கஜா புயல் பாதிப்பால் தொற்று நோய்கள் பரவாமல் தடுத்திட பொதுமக்கள் நலன் கருதி டெங்கு தடுப்பு பணியாளர்கள் எண்ணிக்கை 21 நபர்கள் (300 வீட்டிற்கு ஒரு பணியாளர் என்ற அடிப்படையில்) அமர்த்தி பணி செய்திட துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் திருவாரூர் நேரடி அறிவுரை வழங்கியதாலும், நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் எண் 2571/2017/ஜெ1 நாள் 23.04.2018–ன்படி அனுமதித்துள்ளதால் நோய் தடுப்பு பணியின் அவசர அவசியம் கருதி 01.12.2018 முதல் 21 பணியாளர்கள் பணியமர்த்தி டெங்கு மற்றும் இதர தொற்று நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.6.00 இலட்சம் (ரூபாய் ஆறு இலட்சம் மட்டும்) நிதி ஒதுக்கீடு வழங்கவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

நோய் தடுப்பு பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்ற அலுவலக நடவடிக்கையையும் கூடுதல் நிதி ஒதுக்கீடு ரூ.6.00இலட்சம் (ரூபாய் ஆறு இலட்சம் மட்டும்) வழங்கிடவும் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1466/2018/எச்1)

### பொருள் எண் 3 :

திருத்துறைப்பூண்டி நகராட்சியில் நகல் பெருக்கி இயந்திரம் (Xerox Machine) இல்லாத காரணத்தால் மன்றப் பொருள் தீர்மான நகல், அலுவலக முக்கிய கடிதங்கள் மற்றும் தணிக்கை குறித்த விபரங்கள் தனியார் நிறுவனத்தில் ஜெராக்ஸ் எடுக்கப்பட்டு வருகிறது. 2018–19ஆம் நிதியாண்டிற்கு விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்றுள்ள கீழ்க்கண்ட உள்ளூர் நிறுவனங்களின் விலைப்புள்ளிகள் மன்றத்தின் அனமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | உள்ளூர் நிறுவனத்தின் பெயர் | பக்கம் ஒன்றுக்கு தொகை ரூ. |
|---|---|---|
| 1. | ஜோதீஸ் கம்ப்யூட்டர்ஸ்<br>3/5. பி.எஸ்.டி. காம்ப்ளக்ஸ், மேட்டுத் தெரு, திருத்துறைப்பூண்டி. | 2/– |
| 2. | ஸ்ரீ செல்வ கிருஷ்ணா ஜெராக்ஸ்,<br>3எ. ரயில்வே ஸ்டேசன் ரோடு,<br>திருத்துறைப்பூண்டி | 1/– |

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் பக்கம் ஒன்றுக்கு ரூ.1/– (ரூபாய் ஒன்று மட்டும்) என குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீ செல்வகிருஷ்ணா ஜெராக்ஸ் நிறுவனத்தின் விலைப்புள்ளி யினை மன்றம் ஏற்கலாம்.
3. 2018–19ஆம் ஆண்டிற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.15000/–க்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.365/2015/பி1)

## பொருள் எண் 4 :

சரக்கு மற்றும் சேவை வரிகளின் (GST)படி உள்ளாட்சி அமைப்புகளின்கீழ் ஒப்பந்தப் பணிகளுக்கு பிடித்தம் செய்யப்படும் 2% வரித் தொகையினை 1% சதவீதம் மாநில அரசுக்கும், 1% சதவீதம் மத்திய அரசுக்கும் உரிய அரசு தலைப்பில் செலுத்த ஏதுவாக நகராட்சியின் TAN எண்ணில் G.S.T.R.7 பதிவு சான்று எண் பெற்றுத் தந்த வகையில் R.S. Associates Nagapattinam நிறுவனத்திடமிருந்து ரூ.1750/–க்கான பட்டியலும், மேலும் 1.10.2018 முதல் இரண்டு மாதங்களுக்கு G.S.T.R.7-ல் TDS Return செய்த வகையில் மாதம் ஒன்றுக்கு ரூ.500/– வீதம் ரூ.1000/–ம் வழங்க கோரியுள்ளார்.

எனவே, கூடுதல் தொகை ரூ.2750/–ஐ வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதி வழங்கலாம்.
2. 2018–19 மார்ச் 2019 முடிய உள்ள காலத்திற்கு TDS Return செய்ய ரூ.6000/–க்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.3844/2017/பி1)

**பொருள் எண் 5 :**

திருத்துறைப்பூண்டி நகராட்சியில் **16.11.2018** அன்று வீசிய கஜா புயலினால் புதிய பேருந்து நிலைய கழிவறை, வடபாதி ஆற்றங்கரை தெருவில் உள்ள கழிவறை, வேதாரண்யம் சாலையில் உள்ள கழிவறை மற்றும் மன்னை சாலையில் உள்ள கழிவறை ஆகியவற்றின் மேல்கூரை முற்றிலுமாக சேதமடைந்துள்ளதால் அவற்றிற்கு புதியதாக மேல்கூரை பொருத்தவும் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.**9.00** இலட்சத்திற்கு தனி அலுவலரின் ஒப்புதலுடன் இச்செலவினத்தை நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.
**ந.க.எண். 3654 / 2018/இ1**

**பொருள் எண் 6 :**

திருத்துறைப்பூண்டி நகராட்சியில் **16.11.2018** அன்று வீசிய கஜா புயலினால் வேதாரண்யம் சாலையில் உள்ள நுண்ணுயிரி உரம் தயாரிக்கும் கூடத்தின் மேற்கூரை முற்றிலுமாக சேதமடைந்துள்ளதால் அதற்கு புதிதாக மேற்கூரை மாற்றிடவும், விரிவாக்கம் பணி செய்திடவும் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.**9.90** இலட்சத்திற்கு தனி அலுவலரின் ஒப்புதலுடன் இச்செலவினத்தை நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.
**ந.க.எண். 3166-3 / 2018/இ1**

**பொருள் எண் 7 :**

திருத்துறைப்பூண்டி நகராட்சியில் **16.11.2018** அன்று வீசிய கஜா புயலினால் வேதாரண்யம் சாலையில் உள்ள அரசு மருத்துவமனை வளாகத்தில் உள்ள அம்மா உணவகத்தின் மேற்கூரை மிகவும் சேதமடைந்துள்ளதால் அதற்கு புதியதாக மேற்கூரை பொருத்தி உட்கூரை (Fall Ceilling) அமைக்கவும் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.**4.00** இலட்சத்திற்கு தனி அலுவலரின் ஒப்புதலுடன் இச்செலவினத்தை நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.
**ந.க.எண். 3166-4 / 2018/இ1**

**பொருள் எண் 8:**

திருத்துறைப்பூண்டி நகராட்சியில் **16.11.2018** அன்று வீசிய கஜா புயலினால் புதிய பேருந்து நிலையம், பழைய அலுவலக சமுதாய கூடம், அலுவலக Head Room மற்றும் அலுவலக சைக்கிள் பாதுகாப்பகம் ஆகிய இடங்களில் மேற்கூரை முற்றிலும் சேதமடைந்துள்ளது. அவற்றுக்கு புதியதாக மேற்கூரை புதுப்பிக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 1.70 இலட்சத்திற்கு தனி அலுவலரின் ஒப்புதலுடன் இச்செலவினத்தை நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.
**ந.க.எண். 3166-6 / 2018/இ1**

**பொருள் எண் 9:**

திருத்துறைப்பூண்டி நகராட்சியில் **16.11.2018** அன்று வீசிய கஜா புயலினால் புதிய பேருந்து நிலையம், அரியலூர் தெரு, அபிஷேக கட்டளை தெரு, சிங்களாந்தி, அண்ணா நகர், முத்துப்பேட்டை சாலை, தட்டாரத் தெரு, பள்ளிவாசல் தெரு மற்றும் புதிய பேருந்து நிலைய CWSS ஆகிய இடங்களில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் (OHT) மிகவும் சேதமடைந்துள்ளது. மேலும், நகரில் பொதுமக்களுக்கு குடிநீர் இன்றியமையாத தேவை என்பதால் அதனை கருத்தில் கொண்டு அவற்றிற்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.**2.50** இலட்சத்திற்கு தனி அலுவலரின் ஒப்புதலுடன் இச்செலவினத்தை நகராட்சியின் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.
**ந.க.எண். 3166-5 / 2018/இ1**

**பொருள் எண் 10:**

திருத்துறைப்பூண்டி நகராட்சியில் **16.11.2018** அன்று வீசிய கஜா புயலினால் இராமமடத்தெருவில் உள்ள பழைய பேருந்து நிலைய நிழலக மேற்கூரை முற்றிலும் சேதமடைந்துள்ளது. பழை பேருந்து நிலையம் நிழலகம் பொதுமக்களின் அன்றாடம் பயன்பாட்டில் உள்ளதால் அதனை கருத்தில் கொண்டு அவற்றிற்கு புதியதாக மேற்கூரை புதுப்பிக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.**5.25** இலட்சத்திற்கு தனி அலுவலரின் ஒப்புதலுடன் இச்செலவினத்தை நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.
**ந.க.எண். 3166-2 / 2018/இ1**

**பொருள் எண் 11:**

திருத்துறைப்பூண்டி நகராட்சியில் கடந்த 15.11.2018 அன்று கஜா புயல் தாக்கியதால் நகராட்சிக்குச் சொந்தமான கட்டிடங்கள், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், கழிவறைகள் ஆகியவை சேதமடைந்தன. மேலும், வீடுகள் சேதமடைந்ததால் பாதிக்கப்பட்ட பொது மக்களை 23 நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டு அவர்களுக்கு உணவு, குடிநீர் வசதி ஆகியவை செய்து தரப்பட்டன. மேலும் நகரிலுள்ள மின்கம்பங்கள் பெரும்பாலானவை சாய்ந்து கீழே விழுந்ததால் மின்சாரம் முழுவதுமாக துண்டிக்கப்பட்டது. இதனால் நிவாரண மையங்களுக்கு வாடகை அடிப்படையில் ஜெனரேட்டர் வைக்கப்பட்டு மின்சாரம் வழங்கப்பட்டது. மேலும் நிவாரண மையங்களுக்கு வாடகை அடிப்படையிலான குடிநீர் டேங்கர்கள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டது. நகரின் பெரும்பாலான இடங்களில் சாய்ந்து கீழே விழுந்து போக்குவரத்துக்கு இடையூறாக இருந்த மரங்களை பவர்சா மூலம் அறுத்து அப்புறப்படுத்தவும் அவற்றை வாடகை அடிப்படையிலான லாரி, டிராக்டர்கள் கொண்டும், ஜே.சி.பி, ஹிட்டாட்சி எந்திரங்களை கொண்டும் அப்புறப்படுத்தப்பட்டது தெருக்களில் குப்பைகள் பெருமளவு தேங்கியதால், திருச்சி மாநகராட்சி மற்றும் வெளி நகராட்சிகளிலிருந்து சுகாதார பணியாளர்கள் வரவழைக்கப்பட்டும், வாடகை அடிப்படையில் லாரி, டிராக்டர்களை கொண்டும் குப்பைகள் அகற்றும் பணி செய்யப்பட்டது. அனைத்து தெருக்களிலும் சுகாதாரம் பேணும் வகையில் கிருமி நாசினிப் பொருட்கள் வாங்கப்பட்டு நகரை தூய்மை செய்யப்பட்டது. ஜெனரேட்டர், பவர்சா, வெளியூர்களிலிருந்து வரப்பட்ட வாகனங்கள், கொசுப்புகை எந்திரங்கள், ஆயில் எஞ்சின் ஆகியவற்றுக்கான எரிபொருள் வாங்கப்பட்டுள்ளது. வெளியூர்களிலிருந்து வந்து பணிபுரிந்த பணியாளர்களுக்கு மூன்று வேளை உணவும் வழங்கப்பட்டது. தெருவிளக்குகள் பெருமளவில் தேசமடைந்ததால் அவற்றை சரிசெய்ய, இந்நகராட்சியில் தெருவிளக்கு பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளும் சபரி எலெக்ட்ரிகல்ஸ் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு, புதிய தெருவிளக்குகள் பொருத்தும் பணி மேற்கொள்ளப்பட்டது. மேலும் மழை காரணமாக மிகவும் பழுதடைந்த சாலைகளை தற்காலிகமாக சீரமைக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டது. இவற்றுக்கான செலவினப்பட்டியல் விபரம் பின்வருமாறு.

| வ.எண். | விபரங்கள் | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | நிவாரண மையங்களில் பொதுமக்களுக்கு உணவு வழங்குதல் | 74.59 |
| 2. | ஹிட்டாச்சி இயந்திரம் கொண்டு மரங்கள் அகற்றும் பணி | 04.92 |
| 3. | ஜே.சி.பி. அலுவலக குறிப்பு :<br>இயந்திரம் கொண்டு மரக்கிளைகள், குப்பைகள் அகற்றும் பணி | 08.45 |
| 4. | லாரி, டிராக்டர் மூலம் குப்பை அள்ளும் பணி | 06.00 |
| 5. | டோசர் மூலம் மண் அகற்றும் பணி | 00.58 |
| 6. | டேங்கர் லாரி மூலம் குடிநீர் வழங்கும் பணி | 02.96 |
| 7. | சேதமடைந்த தெருவிளக்குகளை மாற்றும் பணி | 40.50 |
| 8. | தாழ்வான பகுதிகளில் தேங்கியுள்ள மழைநீரை ஆயில் எஞ்சின் மூலம் இறைத்து அப்புறப்படுத்தும் பணி | 02.70 |
| 9. | நிவாரண முகாம்களில் ஜெனரேட்டர் மூலம் மின்சாரம் வழங்கியதற்கான வாடகை | 04.94 |
| 10. | பழுதடைந்த சாலைகளை தற்காலிகமாக சீரமைக்கும் பணி | 05.00 |
| 11. | ஜெனரேட்டர், வாகனங்கள், ஆயில் எஞ்சின், பவர்சா, குடிநீர் டேங்கர் ஆகியவற்றுக்கான எரிபொருள் கட்டணம். | 06.61 |
| 12. | கிருமி நாசினிப் பொருட்கள் வாங்குதல் | 14.00 |
| 13. | வெளியூர் சுகாதார பணியாளர்களுக்கான சிறப்பு ஊக்கத் தொகை | 01.69 |
| 14. | வெளியூர் பணியாளர்களுக்கான உணவு வழங்கியதற்கான செலவினம் | 28.02 |
| | **மொத்தம்** | **200.96** |

மேற்கண்ட விபரப்படி கூடுதல் செலவினத் தொகை ரூ.200.96/–இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

.அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு தமிழ்நாடு நகராட்சிகள் அவசர சட்டம் பிரிவு–15–ன் கீழ் பணிகள் மேற்கொண்டதற்கு அங்கீகாரம் வழங்கலாம்.

3. நிவாரண மையங்களில் பொதுமக்களுக்கு உணவு வழங்குவதற்கு உரிய அரிசி மற்றும் சமையல் பொருட்கள் செலவினம் ரூ.74.59 இலட்சத்தினை அரசிடமிருந்து வரப்பெறும் நிதியினை விட கூடுதலாகும் தொகையினை பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.3166/2018/இ1)**

**பொருள் எண் 12:**

இந்நகராட்சியில் தனியார் பங்களிப்பு நிதி 2018–19ன்கீழ் நகராட்சியின் 24 வார்டுகளிலும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் இயந்திரம் அமைக்கும் பணி ரூ.432.00இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண் 391 நாள் 28.09.2018ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு 16.11.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் மேற்படி தினத்தில் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | சதவீதம் குறைவு / அதிகம் |
|---|---|---|---|---|
| 1 | M/S. Dharana Infra-structure Project Private Limited | 432,00,000/– | 474,00,000/– | 9.72% அதிகம் |

அலுவலக குறிப்பு :

1. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டை விட 9.72 சதவீதம் அதிகமான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/S. Dharana Infrastructure Project Private Limited ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கிய இவ்வலுவலக நடவடிக்கையை மன்றம் ஏற்கலாம்.

**(ந.கஎண்.3285/2018/இ1)**

தனி அலுவலர்,
திருத்துறைப்பூண்டி நகராட்சி.

## <u>மன்றப் பொருள்</u>

இந்நகராட்சியில் தனியார் பங்களிப்பு நிதி **2018–19**ன்கீழ் நகராட்சியின் **24** வார்டுகளிலும் சுத்தகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் இயந்திரம் அமைக்கும் பணி ரூ.**432.00**இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண் **391** நாள் **28.09.2018**ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு **16.11.2018** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் மேற்படி தினத்தில் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | சதவீதம் குறைவு / அதிகம் |
|---|---|---|---|---|
| 1 | M/S. Dharana Infra-structure Project Private Limited | 432,00,000/– | 474,00,000/– | 9.72% அதிகம் |

அலுவலக குறிப்பு :

1. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டை விட **9.72** சதவீதம் அதிகமான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/S. Dharana Infrastructure Project Private Limited ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கிய இவ்வலுவலக நடவடிக்கையை மன்றம் ஏற்கலாம்.

**(ந.கஎண்.3285/2018/இ1)**

நகராட்சி பொறியாளர் ஆணையர்/தனி அலுவலர்.

**பொருள் எண் 5 :**

திருத்துறைப்பூண்டி நகராட்சியில் **16.11.2018** அன்று வீசிய கஜா புயலினால் சேதமடைந்த மற்றும் காணாமல் போன 20W LED, 40W LED, 60W LED பிட்டிங்குகளுக்கு பதிலாக புதியதாக மாற்றவும், சேதமடைந்த 250W சோடியம் ஆவி விளக்கிற்கு மாற்றாக 90W LED Fitting பொருத்திடவும், புதிய பேருந்து நிலையம் மற்றும் இராமமடத்தெருவில் உள்ள உயர்மின் கோபுர விளக்குகளில் பழுதடைந்த சோடியம் ஆவி விளக்குகளுக்கு பதிலாக 200W LED Fitting ஆக பொருத்தவும், திருவாரூர் சாலையில் சேதமடைந்த உயர்மின்கோபுர விளக்குகளை புணரமைப்பு செய்து 200W LED விளக்கு பொருத்தவும் மற்றும் வேதாரண்யம் சாலையில் முற்றிலும் சேதமடைந்த உயர்மின்கோபுர விளக்கிற்கு பதிலாக புதியதாக மாற்றி அமைக்கவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.**41.50** இலட்சமாகும். இச்செலவினத்தை நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.
**ந.க.எண். 3166-1 / 2018/இ1**